விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 184 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 07 செவ்வாய்க்கிழமை (21.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கோட்டாவின் பிறந்ததினமான நேற்று

## ஜனாதிபதி செயலக நுழைவாயிலை இடைமறித்து பாரிய போராட்டம்

### பிக்கு, 4 பெண்கள் உட்பட 21 பேர் கைதாகி விடுவிப்பு



(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாவின் பிறந்தநாளான நேற்று ஜனாதிபதி செயலக நுழைவாயிலை மறித்து பாரிய போராட்டம் முன்னெடுக் ▷15

எரிபொருள் நெருக்கடி

## பல புகையிரத சேவைகள் இரத்து

(கொழும்பு)
எரிபொருள் நெருக்கடி காரணமாக புகையிரத சேவைகள் தடைப்பட்டுள்ளதாக புகையிரத தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட புகையிரத தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ▷15

குழந்தை பிரசவித்த தாய்

## மருத்துவமனையில் உயிருக்குப் போராட்டம்

### வைத்தியர் எரிபொருள் வரிசையில்

(கொழும்பு)
குழந்தை பிரசவித்த தாய் ஒருவர் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில் வைத்தியர் ஒருவர் எரிபொருள் நிலையத்தில் காத்திருந்த சம்பவம் ஒன்று நுகேகொடவில் பதிவாகியுள்ளது.
இது தொடர் ▷15

ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும்

# 21 ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி

### விரைவில் பாராளுமன்றில்



(கொழும்பு)
ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களைக் கையளிக்கும் வகையில் வரையப்பட்ட 21ஆவது அரசியலமைப்பு வரைபுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
இந்தத் தகவலை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வெளியிட்டுள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

காலில் முள்குத்தியதை

## கவனிக்காமல் விட்ட இளைஞன் உயிரிழப்பு

### அராலியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
காலில் முள் குத்தியதுக்கு சரியான முறையில் சிகிச்சை எடுக்காத இளைஞன் ஒருவர் நேற்று உயிரி ▷15

## பிரதேச செயலகங்களின் கண்காணிப்பில் யாழில் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் அந்தந்த பகுதி பிரதேச செயலகங்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நேற்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் ▷15



எரிபொருளுக்காக

## மோதல்

### மூவர் படுகாயம்

(கொழும்பு)
திஸ்ஸமஹாராமவில் ஜூல்பல்லம எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில், கூரிய ஆயுதத்தால் தாக்கப் ▷15

## ஜனாதிபதி கோட்டாவின் கீழ் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
போராட்டம் உருவாக முக்கிய காரணம் பொருளாதாரப் பிரச்சினைதான் எனவும், அதேவேளை ஜனநாயகம், சமூக நீதி போன்ற ஜனநாயக விடயங்கள் மேலெழுந்து வந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கம், சர்வ [illegible] போராட்டக்காரர்கள் உட்பட பல சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ▷15

எதிர்வரும் 4ஆம் திகதி முதல்

## சிறுபோகத்துக்கான உரம் விநியோகம்

### விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)
சிறுபோகத்திற்குத் தேவையான உரம் எதிர்வரும் 4ஆம் திகதி விநியோகிக்கப்படும் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
இவற்றை விரைவாக விவசாயிகளுக்கு ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் பத்திரிகைகளின் நிர்வாகத்தினர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிலவும் கடுமையான எரிபொருள் நெருக்கடி தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசனுடன் யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகை நிர்வாகத்தினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் யாழ். மாவட்டத்தில் நிலவும் கடுமையான எரிபொருள் பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி மற்றும் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இச் சந்திப்பில் வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம், உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன், யாழ். தினக்குரல் பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் பொ. கேசவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபனும் உடன் இருந்தார். (ம-7)

# அத்தியாவசிய பொருட்கள், எரிபொருள் நெருக்கடி தொடர்பில்

## மொத்த, சில்லறை வியாபாரிகளுடன் கிளி. அரச அதிபர் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடல் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் நிர்ணய விலையை பேணுதல், அசௌகரியங்களை தவிர்க்க நடவடிக்கை எடுத்தல், எரிபொருள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கல்ந்துரையாடப்பட்டன.

இதன் போது, எரிபொருளை வர்த்தகர்கள், அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு இலகு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மக்களிற்கு தட்டுப்பாடின்றி பொருட்களை வழங்க வர்த்தகர்கள் ஒத்துழைக்க வேண்டும் என இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் விலைக் கட்டுப்பாட்டுப்பகுதியினர், உயர் அதிகாரிகள், வர்த்தகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-7,100)

# முல்லையில் 715 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உடையார் கட்டுப்பகுதியிலுள்ள தனியார் காணிஒன்றில் போர் நடைபெற்ற காலப்பகுதியில் புதைக்கப்பட்ட 7 பரல்களில் 715 லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தோட்டம் செய்வதற்காக உரிமையாளரால் காணியை கனரக இயந்திரம் மூலம் பண்படுத்தப்பட்டபோதே கடந்த மே மாதம் 31ஆம் திகதி நிலத்தில் புதைக்கப்பட்ட பரல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்து பார்த்த பொலிஸார் காணியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

அதன் பிரகாரம் நேற்றைய தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு நீதவான் ரி.சரவணராஜா, பொலிஸ் அதிகாரிகள், படை அதிகாரிகள், கிராமசேவையாளர் முன்னிலையில் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது நில்த்தில் புதைக்கப்பட்ட 7 பரல்கள் மீட்கப்பட்டுள்ளன குறித்த 7 பரல்களில் 715 லீற்றர் மண்ணெண்ணெய் காணப்பட்டன.

மீட்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டு

## சீனாவிலிருந்து விசேட செய்தி

(கொழும்பு)

சீன அரச தலைவர் ஜி ஜின் பிங் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு விசேட செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

இந்தச் செய்தியை சீனத் தூதுவர் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் வழங்கியிருந்தார்.

சீனத் தூதுவர் Qi Zhen hong, ஜூன் 16ஆம் திகதி வியாழக்கிழமை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்ததாக அரச தலைவர் ஊடகப் பிரிவு அறிவித்திருந்தது.

சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கவுள்ள பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகள் குறித்து அரச தலைவருக்கு சீனத் தூதுவர் இதன்போது விளக்கமளித்துள்ளார்.



இன்று (நேற்று) தனது பிறந்த நாளுக்கு வாழ்த்து தெரிவித்த சீன அரச தலைவருக்கு கோட்டாபய ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்


# துயர் பகிர்கின்றோம்



யாழ். தேசிய லொத்தர் சபை விற்பனை முகவர்
**சரவணமுத்து கனகலிங்கம்** அவர்களின்
பாசமிகு தாயாரும் விநியோக முகவர்
(தேசிய லொத்தர் சபை)
**க. திலகவதி** அவர்களின் பாசமிகு
மாமியாரும் ஆகிய
**திருமதி**
**சரவணமுத்து செல்லம்மா**
அவர்களின் மறைவையொட்டி
அன்னாரது குடும்பத்தினருடன்
துயர்களை நாமும் பகிர்கின்றோம்.

**யாழ். முகவர் தேசிய லொத்தர் சபை கனகலிங்கம், அபிவிருத்தி லொத்தர் சபை யாழ். மு[illegible] அவர்களின் விற்பனை உதவியாளர்கள்**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 7603, 021 567 1532

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

கிளி/கிளிநொச்சி ம.வி. பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற உள்ளதால் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

**காலம் : 26.06.2022 பிற்பகல். 2.00 மணி**
**இடம் : பாடசாலை மண்டபம்**

- அதிபர் -

(C-5419)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **கௌரி சுகுமார்** அவர்களின்
அன்பு மாமியார்
**திருமதி மகேஸ்வரி நவரத்தினம்**
அவர்கள் காலமான செய்தியறிந்து துயர்
அடைவதுடன் அன்னாரின் இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(11936)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **அன்ரன் ஜோ அமல்ராஜ் புனிதசீலி**
அவர்களின் அன்புத் தந்தை
**சாமுவேல் தர்மசகாயம்பிள்ளை**
அவர்கள் காலமான செய்தியறிந்து துயர்
அடைவதுடன் அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(11937)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகு மூலம் வரும் இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேற முடியாது

## அவுஸ்திரேலியப் பிரதமர் திட்டவட்டம்

(மெல்பேர்ன்)

**படகுகள் மூலம் அவுஸ்திரேலியா வரும் இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் தெரிவித்துள்ளார்.**

இறைமையுள்ள எல்லை நடவடிக்கை தொடர்பான எங்கள் திட்டம் தெளிவாக உள்ளது. ஆள் கடத்தல்காரர்கள் துன்பங்களை நெருக்கடிகளை தங்களிற்கு சாதகமாக பயன்படுத்த முயல்கின்றனர் என தெரிவித்துள்ள பிரதமர் அன்டனி அல்பெனிஸ் அவர்கள் மக்களை தவறாக வழிநடத்த முயல்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆள் கடத்தல்களில் பெரும்பாலும் குற்றவாளி கும்பல் களே ஈடுபடுகின்றன. இதனாலேயே அவர்கள் மக்களை தவறாக வழிநடத்துகின்றனர். எனது அரசாங்கம் மனிதாபிமானத்தில் பலவீனமாகவிராது. ஆனால் எல்லையில் பலமாகவிருக்கும் எனவும் அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

பல அரசாங்கங்கள் நீண்ட காலமாக செயற்பட்டது போன்று எங்கள் அரசாங்கமும் சரியான விடயங்களை செய்வதற்கான சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றும் எனவும் குறிப்பிட்டுள்ள பிரதமர் உள்துறை அமைச்சரின் இலங்கைக்கான விஜயத்தின் மூலம் படகுகளில் வருபவர்கள் இங்கு வரவேற்கப்படமாட்டார்கள் என்ற செய்தியை சொல்வதற்காக இந்த விஜயத்தை பயன்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். (நி)

## வினாத்தாள் திருத்தப் பணியில் இருந்து விலக ஆசிரியர்கள் தீர்மானம்

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி காரணமாக இன்று முதல் க.பொ.த சாதாரண தர பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணிகளில் இருந்து விலக ஆசிரியர்கள் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனை தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் வடக்கு கிழக்கில் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு கோரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கோட்டாவை வீட்டுக்கு விரட்ட ஐ.ம.ச. தொடர் போராட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி ஒரு வார காலம் தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அனைத்துத் தரப்பினரும் போராட்டத்தில் பங்கேற்று, ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

## 30-60 யுனிட் பயன்படுத்துவோருக்கு மின் கட்டண உயர்வு இல்லை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் இந்த நட்டத்தை இலங்கை மின்சார சபையால் தாங்க முடியாது.

அதன்படி, மின் கட்டணத்தை எப்படி அதிகரிப்பது என்பது குறித்து அடுத்த சில நாட்களில் முடிவு எடுக்கப்படும்.

ஆனாலும் 30 முதல் 60 யுனிட் பயன்படுத்தும் குறைந்த வருமானம் பெறும் நுகர்வோரின் மின் கட்டணத்தை அதிகரிக்க எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மகப்பேற்று, கருவளத் துறைப் பிரிவுக்கான அவசர மருந்துத் தேவைக்காக, சிவபூமி அறக்கட்டளை ஊடாக, அவுஸ்திரேலியா சிட்னியில் வசிக்கும் மகிந்தன் மகாதேவா வழங்கிய அன்பளிப்பாக பன்னிரண்டு இலட்சம் ரூபாய் நேற்று மகப்பேற்று மருத்துவ நிபுணர் ந.சரவணபவனிடம் கையளிக்கப்பட்டது.

## துவிச்சக்கரவண்டி விபத்துக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி நிலையையடுத்து துவிச்சக்கரவண்டிப் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், துவிச்சக்கரவண்டி விபத்துக்களில் சிக்கி உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், துவிச்சக்கரவண்டி விபத்துக்களால் 96 பேர் மரணித்ததாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (நி)

## 50 மில்லியன் டொலர் வழங்கிய அவுஸ்திரேலியா

(கொழும்பு)

மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையின் அவசர உணவு மற்றும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவுஸ்திரேலிய அரசு 50 மில்லியன் டொலர் தொகையை இலங்கைக்கு வழங்கியுள்ளது. (நி)

## 21 ஆவது அரசியல் அமைப்பு விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

### ஓமல்பே சோபித தேரர் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி என்ற தனிநபரைச் சுற்றி அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்டுள்ளமையே நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையும், பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளும் ஏற்படக் காரணமாகும்.

எனவே 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை விரைவில் நடைமுறைப்படுத்தி சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான தேசிய பொறுப்பினை நிறைவேற்றுமாறு 225 பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கேட்டுக்கொள்வதாக ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசைகளில் காத்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் மக்கள் மனங்களில் வெறுப்பும் விரக்தியும் அதிகரிக்கும். இவ்வாறு வரிசைகளில் காத்திருப்பதால் மக்களுக்கு தமது அன்றாட செயற்பாடுகளை திட்டமிட்ட வகையில் முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறு முடங்கியுள்ள மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்குள்ள ஒரே வழிமுறை அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதாகும். அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு 21 ஆவது அரசியலமைப்பு திருத்தம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தாமல் ஒருபோதும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியாது. பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டால் மாத்திரமே வரிசை யுகத்தினையும் நிறைவுக்கு கொண்டு வர முடியும்.

அனைத்து கட்சி தலைவர்களும் ஒன்றிணைந்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கக் கூடிய ஒரே விடயம் 21 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மாத்திரமேயாகும்.

எனவே இந்த தேசிய பொறுப்பினை நிறைவேற்றுமாறு 225 பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி

# குருநகர் பாடும்மீன் அணி சம்பியனானது



வல்வை தீருவில் மைதானத்தில் வல்வை வைரவிழாவினை முன்னிட்டு வடமாகாண ரீதியாக 87 கழகங்கள் பங்குபற்றிய 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இறுதிப் போட்டியானது கடந்த 16 ஆம் திகதி மாலை 4 மணிக்கு இடம்பெற்றது.

இப்போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் கழகம் மோதியது.

பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் போட்டி ஆரம்பமானது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களும் போடப்படாது நிறைவு பெற்றது.


இரண்டாம் ஆட்டத்தின் போது பாடும்மீன் அணியின் சாந்தனால் ஒரு (01) கோல் போடப்பட்டதும் ஆட்டம் விறுவிறுப்பானது.

இந் நிலைமையில் மாற்று வீரனாக இறங்கிய வினோத்தினால் 2 ஆவது கோல் போடப்பட்டதும் போட்டி பாடும்மீன் வசமே மாறியது.

இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றி பெற்று வல்வையின் வைர விழா கிண்ணத்தை பெற்று சம்பியனானது. (6-106)

# நிசங்கா சதம்

## ஆஸியை வீழ்த்தியது இலங்கை



இலங்கை, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற அவுஸ்திரேலியா பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட்டிங் செய்த அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 291 ரன்கள் எடுத்தது. கப்டன் ஆரோன் பின்ச் பொறுப்புடன் ஆடி அரைசதம் அடித்தார். அவர் 62 ரன்னில் ஆட்டமிழந்தார். நிதானமாக ஆடிய டிராவிஸ் ஹெட் 70 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அலெக்ஸ் கேரி 49 ரன்னில் ஆட்டமிழந்தார். மேக்ஸ்வெல் அதிரடியாக ஆடி 18 பந்தில் 3 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்சருடன் 33 ரன்கள் எடுத்தார்.

இதையடுத்து, 292 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. தொடக்க வீரர் பதும் நிசங்கா சிறப்பாக ஆடி சதமடித்தார். அவர் 137 ரன்னில் வெளியேற குசால் மெண்டிஸ் 87 ரன்களில் அவுட்டானார்.

இறுதியில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்கு 292 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் இலங்கை அணி ஒருநாள் தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2644

Search for people, places and things

### புவனா




### தர்சன்




### நிருதிகா




### சியான்




### சாங்கவி




### மதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதார நெருக்கடிக்கு காரணமான

# கோட்டா, மகிந்த, ரணில், கப்ரால் உள்ளிட்ட 13 பேர் மீது பொதுநல வழக்கு



(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் மற்றும் 3 பேரினால் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சார்பாக சட்டமா அதிபர், மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, அஜித் நிவார்ட் கப்ரால், எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 13 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

2019 இல் வழங்கப்பட்ட சட்டவிரோத மற்றும் தன்னிச் சையான வரிச்சலுகைகளால் அரசாங்க வருவாய் குறைப்பு, சட்டவிரோதமான வரிச் சலுகையைத் திரும்பப் பெறத் தவறியமை உள்ளிட்ட விடயங்கள் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் பீச் ரேட்டிங் குறைப்புகளுக்குப் பின்னர் அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கத் தவறியமை ரூபாவின் மதிப்பை சரியான நேரத்தில், ஒழுங்கான மற்றும் பொருத்தமான முறையில் மதிப்பிழக்கச் செய்யாதமை உள்ளிட்ட விடயமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரித்த, சட்டவிரோத, தன்னிச்சையான மற்றும் நியாயமற்ற செயல்கள் அல்லது புறக்கணிப்புகளுக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## சுகாதாரப் பணியாளர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் எரிபொருள்

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுகாதாரப் பணியாளர்களுக்கு பிரத்தியேகமாக விசேட எரிபொருள் கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை அத்தியாவசிய சேவை ஊழியர்களுக்கு அவர்களின் கடமைகளை நிறைவேற்ற பெரிதும் உதவும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## தம்பியை வாழ்த்திய அண்ணன்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 73 ஆவது பிறந்த தினம் நேற்றாகும்.

இந் நிலையில் ஜனாதிபதிக்கு பல்வேறு அரசியற்கட்சி தலைவர்களும் தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது தம்பியான ஜனாதிபதி கோட்டபாய ராஜ பக்ஷவுக்கு டுவிட்டரில் வாழ் த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர் இந்த நெருக்கடியிலிருந்து இந்த நாட்டைப் பாதுகாக்கபோரிடுவார் என்ற உறுதி எனக்கு இருக்கிறது என பதிவிட்டுள்ளார். (நி)

# வாக்காளர் பட்டியலில் பெயர்களை சரி பார்த்து கொள்ளுங்கள்

## தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா? என்பதை சரிபார்க்குமாறு வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தமது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதா என்பதை பிரதேச கிராம உத்தியோகத்தர்களிடம் சென்று அல்லது தேர்தல் ஆணைக் குழுவின் www.elections.gov.lk என்ற இணையத் தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் உறுதிப்படுத்த முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெயர் சேர்க்கப்படாவிட்டால், ஜூலை 12 ஆம் திகதிக்கு முன்னதாக 011 286 0034 என்ற எண்ணுக்கு அறியத் தருமாறு தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (நி)



மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதாரத் துறை ஊழியர்கள் என பல்வேறு தரப்பினரும் எரிபொருளை பெற்றுத்தருமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்தனர்.

# இராசிபலன்

21.06.2022
ஆனி 07, செவ்வாய்க்கிழமை
அட்டமி பின்னிரவு 2.21 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 10.39 மணிவரை
சுப நேரம் -10.24- 11.54 மணிவரை
இராகு காலம் -2.54-4.24 மணிவரை
உலக யோகா தினம்
சந்திராஷ்டமம் - ஆயிலியம், மகம்

**வளவன்**




வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், பயணத்தால் பலனுண்டு.




மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




தலைமைப்பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப செய்திகள் வந்து சேரலாம், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.




பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.




எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைதூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் குறையும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




பேச்சை குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




பெற்றோர் மீது பிரியம் கூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குரிய வேலையை காப்பவனே வாழ்த்தப்பட்டவன்

### கால அவகாசம் என்பது

# பொறுப்புக்கூறலில் இருந்து அரசை விடுவிக்கிறது

## அஞ்சலி உரையில் வலி.கிழக்கு தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு எதிராக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கு நீதிகேட்டு போராடும் தாய்மார் நீதி கிட்டாமலேயே படிப் படியாக மரணித்துப்போகும் அவலம் தொடர்கின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அரசியல் கைதி பார்த்தீபனின் தாயாரின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலியுரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், தெரிவிக்கையில், கடந்த 26 ஆண்டுகளாக பிள்ளையை அரசியல் கைதியாகப் பிரிந்து அப்பிள்ளையின் விடுதலைக்காகப் போராடிய தாய் மரணித்துள்ளார்.

அதுபோன்று கடந்த வாரம் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் சகாதேவன் நிலக்சனின் தாயார் மரணமடைந்தார். அவரும் படுகொலை செய்யப்பட்ட மகனுக்காக நீதி கேட்டு போரா டிய தாய் ஆவார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மனித உரிமைகளை நசுக்கும் காட்டுமிராண்டித்தனமான சட்டம் என உலகம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான அநீதியான சட்டங்களின் வாயிலாகவே அப்பாவிகள், அல்லது சிறு குற்ற ங்களுடன் தொடர்புபட்ட தமிழ் இளையோர் சிறைகளில் தசாப்தக்கணக்கில் சித்திர வதை செய்யப்படுகின்றனர். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அரசியல் கைதிகள் விடயத்தில் முழு மையான நேர்மையினைப் பின்பற்றவில்லை.

பாதிக்கப்பட்ட தாய்மார்களே நீதிக்காக விட்டுக் கொடுப்பின்றி போராடுகின்றனர். நீதி கிட்டாது தாய்மார் மாண்டு போவது அரசாங்கத்தினை பொறுப்புக் கூறலில் விடுவிக்கும் நிலைமையாகவே அமையும் என்பதை சர்வதேசம் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும் என தெரிவித்தார். (நி-6)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber: 076 636 3378

E.mail:

valampurii@yahoo.com


### பெற்றோல் அடிப்பதா, விடைத்தாள் திருத்துவதா?

# எரிபொருள் கோரி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் க.பொ.த. சாதாரண தர விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் நேற்று எரிபொருள் பெற்றுத்தரக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு முன்னால் நேற்றுக் காலையில் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உரிய எரிபொருள் வழங்கப்பட வேண்டும் அல்லது தமக்கான எரிபொருளை பெறுவதற்கு குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றினை ஒதுக்குமாறும் கோரியே இப் போராட்டம் இடம் பெற்றது. "இதன்போது றோட் டில் நிற்பதா, போட்டில் நிற்பதா?", "பெற்றோல் அடிப்பதா, விடைத்தாள் திருத்துவதா?" போன்ற கோசங்களும் எழுப்பப்பட்டன.

அதேவேளை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் எரிபொருள் வேண்டும் எனக் கோரி ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-6-18-33-104)

### எமக்கான மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்வோம்

## திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு விதைகள், நாற்றுகள் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

வறுமை நிலையில் வாடும் மக்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்காக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ம.நடனதேவன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை "எமக்கான மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்வோம்" எனும் கருப்பொருளில் சாவகச்சேரி நகர் மற்றும் கல்வயல் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான பொலித்தீன் பைகள், நாற்றுகள் மற்றும் விதைகளை வழங்கி வைத்திருந்தார். (நி-6-30)

# அரிசி விலை மாற்றம், பதுக்கல் தொடர்பாக யாழில் 41 வழக்குகள் இதுவரை பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 41 வழக்குகள் பதியப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் என்.விஜிதரன் தெரிவித்தார்

மாவட்ட செயலகத்தில் அரிசி கட்டுப்பாட்டு விலை மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் நேற்று திங்கட்கிழமை கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டம் மாத்திரமல்ல இலங்கை பூராகவும் அரிசி கட்டுப்பாட்டு விலை தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுகின்றது. இந்த மாதத்தில் முதலாம் திகதியிலிருந்து அரிசி சம்பந்தமாக 41 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தில் உள்ள. அரிசி ஆலைகளின் மூன்றுக்கு மேற்பட்ட அரிசி ஆலைகளை ப்ரிசோதித்து விலை மாற்றம் தொடர்பிலான வழக்குகளை பதிவு செய்திருக்கின்றோம்.

விலை மாற்றம் தொடர்பில் 2000 ரூபா விலை பொறிக்கப்பட்ட 10 ஆயிரம், 10 கிலோ அரிசி மூட்டைகள் காணப்பட்டமையினால், அத்தோடு விலை மாற்றம் தொடர்பில் மூன்று வழக்குகள் பதிவு செய்திருக்கின்றோம்.

பதுக்கல் தொட ர்பில் ஒரு வழக்கு பதியப்பட்டு ள்ளது. அத்தோடு கட்டுப்பாட்டு விலையை மீறியோருக்கு எதிராக 10 பேருக்கு வழக்கு பதிவு செய்திருக்கின்றோம். இவை உள்ளடங்கலாக அரிசி சம்பந்தமாக 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-6-18-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவடையும் நிலக்கரி இருப்புகள் அடுத்த வருடம் கடும் மின் நெருக்கடி

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

**அடுத்த வருடம் கடும் மின் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**


எதிர்வரும் செப்டெம்பர் 15 - 20 ஆம் திகதிக்குள் இலங்கையின் நிலக்கரி இருப்புக்கள் குறைவடையும் எனவும் எதிர்காலத்தில் தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்யாவிட்டால் இந்த நிலை ஏற்படுமென அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தடுக்க சுமார் 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை இலங்கைக்கு நிலக்கரி இறக்குமதி செய்யப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, அரசியல் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (நி)

## தமிழகம் வந்த ஈழத்தமிழர்களை அகதிகளாக அறிவியுங்கள்

### அன்புமணி ராமதாஸ் கோரிக்கை



(சென்னை)

பொருளாதார நெருக்கடியால் தமிழகம் வந்த ஈழத்தமிழர்களை அகதிகளாக அறிவிக்க வேண்டும் என பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த 3 மாதங்களில் 90 ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர். ஆனால், அவர்கள் இதுவரை அகதிகளாக அறிவிக்கப்படவில்லை.

சட்டவிரோதமாக குடியேறியவர்களாக கருதி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்கு வந்த ஈழத்தமிழர்களை அகதிகளாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக அரசு கடிதம் எழுதி இரு மாதங்களாகியும் அதன் மீது மத்திய அரசு இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அதனால், ஈழத்தமிழர்களுக்கு உதவிகள் வழங்க முடியவில்லை. இலங்கையில் இருந்து வந்த தமிழர்களின் துயரம் தீர்க்கப்பட வேண்டும். அவர்களை அகதிகளாக அறிவித்து உதவிகளை வழங்க வேண்டும். ஏற்கனவே தமிழகத்தில் உள்ள அகதிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (நி)

## 65,000 மெற்றிக்தொன் உரம் அடுத்த மாதம் நாட்டிற்கு


(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 65,000 மெற்றிக் தொன் யூரியா உரம் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளதாக விவசாய மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு 50,000 மெற்றிக் தொன் உரமும் சோளச் செய்கைக்கு 10,000 மெற்றிக் தொன் உரமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரம் வழங்குவது தொடர்பில் முறைகேடுகள் நடக்காமல் பார்த்துக்கொள்வது அதிகாரிகளின் பொறுப்பு என்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக அந்தஸ்து பாராமல் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## எரிபொருளுக்கு காத்திருக்கும் மக்களுக்கு தேநீர், பாண் வழங்கிய கிரிக்கெட் வீரர்



(கொழும்பு)

இலங்கையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான மக்களின் வரிசைகள் நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் றொசான் மகாநாம தேநீர், பாண் பரிமாறும் புகைப்படங் கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. (நி)


NOTICE

UNIVERSITY OF JAFFNA,SRI LANKA

OPERATIONAL TECHNICAL SECRETARIAT(OTS)

WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION

**POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME)- ON CONTRACT BASIS- 01 VACANCY**

The University of Jaffna, Sri lanka will entertain applications for the above mentioned post under OTS- AHEAD Operation from suitably qualified persons up to 30.06.2022.

The Salary of the package is LKR.42,800.00 PM (Fixed). In addition EPF 12% and ETF 3% will be paid.

Applicants are requested to visit jaffna University Website www.jfn.ac.lk for further details.

Registrar

(C-4518)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 2
கி.பா: சூரி 2 செவ் 5 இல்
உயரம்:170 cm
தகைமை/தொழில்:அஞ்சல் உதவியாளர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
விவாகரத்தானவர்
தொ.இ: B/12749

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:சதயம் 4
கி.பா: 32 சூரி8 செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/ தொழில்: BA பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச. தனியார் தொழில்
உள்நாடு மட்டும்
தொ.இ: B/12750

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா:58 சூரி 11 செவ் 7 இல்
தகைமை/தொழில்:வியாபாரம் (கனடா)
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12751

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம் : பூரம் 4
கி.பா:63 ¾ சூரி 8 செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L டெக்ரேசன் கடை
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12752

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி 4
கி.பா: 50 சூரி 10 செவ் 1 இல்
உயரம்: 150 cm
தகைமை/தொழில்: ஆசிரியர் (அரச தொழில்)
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ:G/12758

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா:சூரி ,செவ் 9 இல்
உயரம்:147 cm
தகைமை/ தொழில்:A/L தையல் ஆரிவேக்
எதிர்பார்ப்பு:அரச தொழில் வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ: G/12759

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: சூரி 4 செவ் 2 இல்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: பௌதிக விஞ்ஞானம் இறுதி ஆண்டு மாணவி
எதிர்பார்ப்பு:வைத்தியர்.அரச வங்கியாளர் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12761

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி 2
கி.பா:20 சூரி 3 செவ் 9 இல்
உயரம் :5'8"
தகைமை/ தொழில்:பட்டதாரி
எதிர்பார்ப்பு: கனடா மட்டும்
தொ.இ:G/12762

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 76

# ஏழ்மையிலும் நேர்மை



காமராஜர் ஒரு நாள் வீட்டில் அமர்ந்து மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.


அப்பொழுது அவரைப் பார்க்க ஒரு சிறுமியும் சிறுவனும் உள்ளே வந்தனர். பரட்டை தலையும் அழுக் குத் துணியும் அவர்களின் ஏழ்மையை பறைசாற்றின. பணியாளர் ஒருவர் அவர்களை விரட்ட, முற்பட, வெளி நுழைவாயில் வரை ஓடிய குழந்தைகள் தயங்கித் தயங்கி நின்றார்கள். தம்மை பார்க்க வரும் பிரமுகர்களை வாசல் வரை வந்து வழியனுப்பிய காமராஜர், அந்தக் குழந்தைகளை கவனித்து விடுகிறார். அடுத்த நிமிடம் உற்சாகம் பொங்க "என்னையா பார்க்க வந்தீங்க?" என்று கேட்டபடி அவரே குழந்தைகளின் அருகில் வந்து விட...

அப்பொழுது அந்தச் சிறுமி தயங்கி பேசினாள் "உங்களைத் தான் பார்க்க வந்தோம். எங்களுக்கு அப்பா இல்லை . அம்மா மட்டும் தான். அண்ணனுக்கு டைப்ரைட்டிங் பரீட்சை பீஸ் கட்ட பணம் இல்லை. உங்களை பார்த்தா உதவி செய்விங்கன்னு எல்லோரும் சொன்னாங்க அது தான் வந்தோம்" என்றாள் அந்த சிறுமி...

அவர்களை அன்போடு தட்டிக் கொடுத்த படி. "அம்மா தான் அனுப்பி வைத்தாங்களா? என்று காமராஜர் கேட்க... அந்த குழந்தைகளோ "இல்லை ஐயா, நாங்களாகத் தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாக விற்கிறாங்க. அதுல தான் எங்களை படிக்க வைக்கிறாங்க" என்று சொல்ல. அதற்கு மேல் கேட்க முடியாமல். மாடிக்குச் சென்ற அவர் ஒரு கவருடன் வந்தார். சிறுமியிடம் கொடுத்து "இதில் கொஞ்சம் பணம் இருக்கு. அண்ணனுக்கு பீஸ் கட்டிடுங்க... அம்மா பேச்சை கேட்டு நல்ல பிள்ளைங்களாக நடந்து கொள்ளுங்க என்று சொல்லி அனுப்பி வைத்தார்..."

மறுநாள் மீண்டும் அந்தக் குழந்தைகள் வந்தனர். உதவியாளர் வைரவன் குழந்தைகளை உள்ளே அழைத்து வர... "வாங்க வாங்க" என்று அவர்களை வாஞ்சையுடன் அழைத்த காமராஜரிடம் அந்தக் குழந்தைகள். "பரீட்சைக்கு பணம் கட்டி விட்டோம் ஐயா . அந்த பரீட்சை சிட்டையை அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க என்று காமராஜரிடம் அந்தச் சிறுமி அந்த பரீட்சை சிட்டை நீட்டினாள் ... காமராஜர் கண் கலங்கி விட்டார்.


ஏழ்மையிலும் இவ்வளவு நேர்மையா? குழந்தைகள் அவரை ... வணங்கினார்கள் அவரும் குழந்தைகளை வணங்கினார்.... வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.



Sinthu Sinthu

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# கடும் வெப்பம்
## ஒரே நேரத்தில் பலியாகிய 2,000 உயிரினங்கள்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நிலவிவரும் கடும் வெப்பத்தினால், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் பல மாகாணங்களில் வரலாறு காணாத அளவுக்கு கடுமையான வெப்பம் பதிவாகி வருகின்றது.

இந் நிலையில், கென்சாஸ் மாகாணத்தில், கடும் வெப்பம் காரணமாக, அங்கு உள்ள பண்ணை ஒன்றில், 2 ஆயிரம் கால்நடைகள் உயரிழந்துள்ளன.

இது குறித்த காணொளி காட்சி தற்போது வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புவி வெப்பமயமாதலால் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# நட்பு ந...
# கைவ...
## நே...

(பிரஸ்ஸல்ஸ்)

எவ்வளவு பொருளாதார ...
உக்ரைனைக் கைவிட்டுவிடக்...
ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க் தெ...

ஜேர்மனி ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

'உக்ரைன் போர் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. அது, பல ஆண்டுகளுக்கு நீடிக்கலாம். எனவே, அதற்கேற்ப நாம் நம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

உக்ரைன் போர் மிக நீண்ட காலத்துக்கு நடைபெறுவதால் நேட்டோ உறுப்பு நாடுகளும் நட்பு நாடுகளும் உக்ரைனுக்கு தற்போது அளித்து வரும் ஆதரவைக் குறைத்து

# வோஷிங்டனில் துப்பாக்கி சூடு
# ஒருவர் உயிரிழப்பு
## பொலிஸார் உட்பட மூவர் காயம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வோஷிங்டன், டி.சி.இல் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

யு ஸ்ட்ரீட் நொர்த்வெஸ்ட் பகுதியில், வெள்ளை மாளிகையில் இருந்து 2 மைல் தொலைவில் உள்ள இடத்தில் நடந்த இசை நிகழ்ச்சியில், நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.

அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், குழந்தைகள் மற்றும் குடும்பங்களைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா தாக்குதல் ஆயுதங்களை தடை செய்ய வேண்டும் அல்லது அவற்றை வாங்கும் வயதை 18 லிருந்து 21 ஆக உயர்த்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகள் உக்ரைனை விட்டு விடக்கூடாது

## நேட்டோ பொதுச் செயலர்

**தார இழப்பு ஏற்பட்டாலும், நட்பு நாடுகள் விடக்கூடாது என நேட்டோ பொதுச் செயலர் க் தெரிவித்துள்ளார்.**

விடக் கூடாது. எவ்வளவு பொருளாதார இழப்பு ஏற்பட்டாலும், நட்பு நாடுகள் உக்ரைனைக் கைவிட்டு விடக்கூடாது.

நீண்ட காலத்துக்கு போர் நீள்வதால் ஐரோப்பிய நாடுகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படும் என்பது உண்மையே. அதிநவீன ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவதால் மட்டுமன்றி, எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றத்தாலும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கும்.

ஆனால், அதற்காக போரில் உக்ரைனுக்கு ஆதரவு அளிப்பதிலிருந்து ஐரோப்பிய நாடுகள் பின்வாங்கிவிடக் கூடாது.

போர் முனையில் உக்ரைன் வீரர்கள் சந்திக்கும் இழப்புகளோடு ஒப்பிடுகையில், உணவு, எரிபொருள் விலையேற்றத்தால் ஏற்படும் இழப்பு மிகவும் சிறியதாகும்.



கடந்த 2014 ஆம் ஆண்டில் கிரீமியா பிரதேசத்தை இணைத்துக் கொண்டதைப் போல, தற்போது உக்ரைனின் மற்ற பகுதிகளையும் கைப்பற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினின் நோக்கம் நிறைவேற அனுமதித்தால், தற்போதைய பொருளாதார இழப்புகளைவிட அதிக விலையை ஐரோப்பிய நாடுகள் கொடுக்க வேண்டியிருக்கும்' எனத் தெரிவித்தார். (நி)

## பிரித்தானியாவிற்குள் நுழைந்துள்ள ரஷ்ய உளவாளிகள்

(லண்டன்)

ரஷ்ய ஜனாதிபதிபுடினின் கட்டளையை ஏற்று பிரித்தானியாவில் 50 உளவாளிகள் ஊடுருவியுள்ளதாகவும் குறித்த உள்வாளிகள் எப்போது வேண்டுமானாலும் தாக்குதலை முன்னெடுக்கலாம் என பிரித்தானிய அதிகாரிகள் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்யாவுடன் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் சைபர் தாக்குதல்களை நடத்த தயாராக இருக்கும்படி இரகசிய உளவாளிகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவுறுத்தியதாக பிரித்தானிய உளவுத்துறை சந்தேகம் தெரிவித்துள்ளது.

உக்ரைனிய ஆதரவாளர்கள் மற்றும் ரஷ்ய எதிர்ப்பாளர்களை குறிவைத்து இராணுவத் தகவல்களைத் திருடவும் அந்த உளவாளிகள் முயற்சிப்பார்கள் என்று பிரித்தானிய உளவுத்துறைத் தலைவர்கள் அஞ்சுகின்றனர்.

நாம்பகிரங்கமாக உக்ரைனுக்கு ஆதரவளித்துவருவதால், ரஷ்ய உளவுத்துறை உக்கிரமாக பிரித்தானியாவில் செயற்படும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

## அசாமில் தொடர் மழை; இதுவரை 62 பேர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியா - அசாம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் பலத்த மழை காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 62 ஆக உயர்வடைந்துள்ளது.

மழை வெள்ளத்தால் 32 மாவட்டங்களில் மொத்தம் 30 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல பகுதிகளிலும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் சிக்கி இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மீட்பு பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், வெள்ளம் சூழ்ந்த பகுதியில் இருந்து மீட்கப்பட்ட 1.56 இலட்சம் பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## எதியோப்பியாவில் இனக்கலவரம் சுமார் 200 பேர் படுகொலை

(எதியோப்பியா)

எதியோப்பிய கிளர்ச்சிக் குழுவொன்று அம்ஹாரா இனக்குழுவைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை படுகொலை செய்துள்ளது.

அதிகாரிகள் மற்றும் செய்தி அறிக்கைகளின்படி, ஆபிரிக்காவின் இரண்டாவது அதிக மக்கள்தொகை கொண்ட நாட்டில் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் பதிவான சமீபத்திய கொடூர படுகொலையாக இது பார்க்கப்படுகின்றது.

எதியோப்பியாவின் மிகப் பெரிய பிராந்தியமான ஒரோமியாவில் உள்ள டோல் என்ற கிராமத்தை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஒரோமோ லிபரேஷன் ஆர்மி உறுப்பினர்கள் தாக்கியதில் குறைந்தது 230 பேர் கொல்லப்பட்டதாக சாட்சிகளும் அதிகாரிகளும் தெரிவித்தனர்.

ஓரோமோ லிபரேஷன் ஆர்மி- ஓ.எல்.ஏ என அழைக்கப்படும் கிளர்ச்சிக் குழு, எதியோப்பிய அரசாங்கத்தால் ஒரு பயங்கரவாத அமைப்பாக பார்க்கப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(முறிகண்டி)

கோட்டா கோ கம போராட்டக்களத்தில் உருவாக்கப்பட்ட நூலகத்திலிருந்து பாடசாலை மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி முற்போக்கு சிந்தனை இளைஞர்களின் ஒழுங்குபடுத்தலில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த கோட்டா கோ கம போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், போராட்டக்களத்தில் உருவாக்கப்பட்ட நூலகத்திற்கு வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களை கையளிப்பதற்காக கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

தொடர்ந்து, ஸ்கந்தபுரம் 2 ஆம் இலக்க பாடசாலை மற்றும் ஆனைவிழுந்தான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளிற்கு விஜயம் மேற்கொண்டு குறித்த கற்றல் உபகரணங்களை மாணவர்களிடம் கையளித்தனர். (நி-6-100-316)



வவுனியா 653 ஆம் படைப் பிரிவின் ஒழுங்கமைப்பில் பிரிகேடியர் கொமாண்டர் நாமல் சேரவிங்க தலைமையில் வவுனியா மற்றும் மன்னாரை சேர்ந்த 1500 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னாரில் இடம்பெற்றது. (படம் : ஜோசப்நயன்)

# எரிபொருள் மாபியாக்களை கட்டுப்படுத்த விநியோக அட்டைகள்

(குருமன்காடு)

வவுனியாவில் பெற்றோல் விநியோகத்தை சீராக ஒழுங்கமைக்கும் வகையில் ஒவ்வொரு வாகனங்களுக்கும் எரிபொருள் விநியோக அட்டைகளை வழங்கி நிகழ்நிலை மூலம் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இராணுவ அதிகாரிகள், பொலிஸார், திணைக்களத் தலைவர்கள், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் ஆகியோருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருள் அட்டைகள் வழங்கப்பட்டு அதனை நிகழ்நிலையில் (ஒன்லைனில்) பதிவு செய்து வாரத்திற்கு ஒரு தடவை எரிபொருள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-6-250)

# டீசல் வழங்குமாறு கோரி

## அரச-தனியார் பேருந்து உரிமையாளர்கள் இடையே கருத்து முரண்பாடு



(முறிகண்டி)

டீசல் வழங்குமாறு தெரிவித்து கிளிநொச்சி அரச பேருந்து சாலையை தனியார் பேருந்து சேவையினர் முற்றுகையிட்டனர்.

நேற்று முற்பகல் அரச பேருந்து சாலையின்பிரதான வீதியை மூடி போராட்டம் ஒன்றை தனியார் பேருந்துரிமையாளர்கள் முன்னெடுத்தனர்.

தனியார் பேருந்து சேவையினர் சேவைக்கு தேவையான எரிபொருளை அரச பேருந்து சாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சு அறிவித்த நிலையில், தமது சேவையை முன்னெடுக்க எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கு சென்றால், அங்கு டீசல் தர மறுப்பதாகவும், அரச பேருந்து சாலைகளில் பெறுமாறு தெரிவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தமக்கு தேவையான எரிபொருள் மாத்திரமே கிடைப்பதாகவும், அதில் தனியார் சேவையினருக்கு வழங்க முடியாதுள்ளதாக அரச பேருந்து சாலையினர் தெரிவிக்கின்றனர்.

இதன்போது இருதரப்பினருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது. அங்கு வருகை தந்த பொலிஸ் அதிகாரிகளால் சுமுகமான நிலையில் கொண்டு வரப்பட்டது. (நி-6-100)

# கடல் நீர் உட்புகும் அபாயம்

## மணல் அகழ்வினை கட்டுப்படுத்துங்கள்

### பூநகரி பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி நல்லூர் சாமிப்புலம் பகுதியில் தொடர்கின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு பூநகரி பொலிஸார் கூடுதல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. சாமிப்புலம் பகுதியில் இருந்து கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக கடற்கரைக்குப் பக்கத்தில் மணல் அகழ்வு நடைபெற்று யாழ்ப்பாணப் பகுதிக்கு டிப்பர்களில் மணல் கொண்டு செல்லப்படுகின்றது.

இது தொடர்பாக இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. சாமிப்புலம் பகுதியில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் கடல் நீர் உட்புகக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மணல் அகழ்வு தொடருமானால் பெருமளவு வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறும். நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர வேண்டிய அவலம் ஏற்படும்.

பூநகரியின் கௌதாரி முனை போன்ற பகுதிகளில் மணல் அகழ்வு நடைபெற்ற போது கடல் நீர் உட்புகும் அபாயம் சுட்டிக் காட்டப்பட்டது. அதே போன்ற நிலைதான் தற்போது சாமிப்புலத்திலும் ஏற்பட்டுள்ளது. மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு பூநகரி பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தவிசாளர் தெரிவித்தார். (நி-6-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 230 | 240 | 250 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 400 |
| தக்காளி | 650 | 500 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 160 | 140 |
| கோவா | 330 | 250 | 350 | 350 |
| கரட் | 250 | 380 | 350 | 400 |
| பூசணி | 160 | 170 | 160 | 160 |
| புடோல் | 320 | 200 | 140 | 240 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 230 | 220 | 240 | 240 |
| பாகற்காய் | 600 | 600 | 600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 340 | 240 | 200 |
| பயற்றங்காய் | 200 | 350 | 240 | 250 |
| லீக்ஸ் | 200 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 350 | 350 | 280 | 400 |
| கறிமிளகாய் | 300 | 400 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 600 | 600 | 600 |
| போஞ்சி | 600 | 500 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | — | 280 |
| கீரை – 1 பிடி | 60 | 50 | 70 | 100 |
| தேசிக்காய் | 400 | 500 | 450 | 480 |
| தேங்காய் ஒன்றூ | 80 | 80 | 60 | 40-60 |
| இராசவள்ளி | 160 | 300 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 450 | 600 |
| முள்ளங்கி | 220 | 160 | 240 | 200 |
| பொன்னாங்கண்ணி | 50 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 60 | 150 | 100 | 120 |

# வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தால் மரவள்ளிதடிகள் வழங்கி வைப்பு

(தருமபுரம்)

தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலத்தில் மக்கள் வீடுகளில் தோட்டங்களில் ஈடுபட்டுவரும் நிலையில் வன்னி தமிழ் மக்கள் ஒன்றிய அமைப்பினால் பொன்நகர் கிராமத்தில் இயங்கும் புதிய பாதை சிறு சேமிப்பு அங்கத்தவர்கள் 50 பேருக்கு மரவள்ளி தடிகள் வழங்கப்பட்டன.

காலத்தின் தேவை கருதி எதிர்வரும் மாதங்களில் உணவு நெருக்கடி நிலையை முடிந்தவரை தவிர்த்துக் கொள்வதற்காகவே அத்திட்டம் மேற்



கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தினை விழிப்புணர்வாக எடுத்துச் கொண்டு ஏனைய பிரதேசங்களிலும் இது போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன்ஊடாக உணவு நெருக்கடியை தவிர்த்துக் கொள்ள முடியும். (நி-6-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2022-16.07.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

# உடல் நலத்தில் கூடுதல் கவனம் தேவை!



**முடியாத காரியத்தை எளிதில் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்ற தனுசு இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவானோடு விரயாதிபதி செவ்வாய் இணைந்து சஞ்சரிப்பதால் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். ரிஷப சுக்கிரன் சஞ்சாரம் ஆனி 4 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உத்தி யோகம் மற்றும் தொழிலில் நன்மைகள் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். இதுவரை போராடியும் வராத பாக்கிகள் இப்பொழுது வசூலாகும்.

உடல்நலத்தில் கூடுதல் கவனம் தேவை. சிறு சிறு தொல்லைகள் அடிக்கடி தலை தூக்கும்.

**மிதுன - புதன் சஞ்சாரம்**

ஆனி 11 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்தில் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கும் பொழுது, கல்யாணம் போன்ற சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பயணங்கள் பலன் தருவதாக இருக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும்.

**மேஷ - செவ்வாய் சஞ்சாரம்**

ஆனி 12 ஆம் திகதி, மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கிறார். மேஷம் செவ்வாய்க்கு சொந்த வீடாகும். தைரிய காரகன் செவ்வாய் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் பலம்பெற்றிருக்கும் இந்த நேரம், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தனவரவு திருப்தி தரும். பூர்வீகச் சொத்துக்களை கொடுத்துவிட்டுப் புதிய சொத்துக்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பொது வாழ்வில் புதிய பதவிகள் கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்பும், அதற்கேற்ப வருமானமும் உண்டு.

**கடக - புதன் சஞ்சாரம்**

ஆனி 28 ஆம் திகதி, கடக இராசிக்குப் புதன் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. கேந்திராதிபத்தியத்தில் தோஷம் பெற்ற கிரகம் மறைவது யோகம் தான். தொழிலில் இருந்த குறுக்கீடுகள் அகலும். தொலை தூரத்தில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும். தொழிலில் புதிய




பங்குதாரர்கள் வந்திணையும் வாய்ப்பு உண்டு. சுபகாரியங்கள் நடைபெறும் நேரம் இது.

**மிதுன - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 29 ஆம் திகதி, மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு இலாபாதிபதியான சுக்கிரன் 7 இல் வரும் பொழுது பகை கிரகமாக இருந்தாலும் பலன் கொடுக்கும். அதே நேரத்தில் பாக்கியாதிபதி சூரியனோடு அவர் இணைந்திருப்பதால் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும்.

இல்லத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவும் செய்து முடிப்பீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் பணி நிரந்தரமாகும். இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவனை வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் அதிகமாக இருக்கும். வீட்டுத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். குடும்ப ஒற்றுமை திருப்தி தரும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பணிபுரியும் பெண்களுக்கு இதுவரை இருந்த நெருக்கடி நிலை மாறும். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# செய்தொழிலில் போதுமான வருமானம் கிடைக்கும்!



**யாரைப் பார்த்தால் காரியத்தை முடிக்க முடியும் என்று அறிந்த மகர இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். சுகாதிபதி செவ்வாய்ை, சனி பார்க்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும்.

**ரிஷப - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 4 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் பலம் பெறும் பொழுது ஓரளவு நன்மைகள் கிடைக்கும். குறிப்பாக செய்தொழிலில் போதுமான வருமானம் கிடைக்கும்.

ஜென்மச் சனி வக்கிரம் பெற்றிருப்பதால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் திடீரென மாற்றங்கள் உருவாகும். உறவினர்களின் யோசனை மனக்குழப்பத்தை ஏற்படுத்தும்.

**மிதுன - புதன் சஞ்சாரம்**

ஆனி 11 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். 6 க்கு அதிபதி புதன் 6 இல் வலுவடையும் இந்த நேரம் மிகுந்த கவனத்தோடு செயற்படுவது நல்லது.

எதிரிகளின் பலம் கொஞ்சம் மேலோங்கியிருக்கும். உடல்நலத்திலும் மீண்டும் பழைய தொல்லை தலை தூக்கும்.

எதையும் யோசித்துச் செய்வது மட்டுமல்லாமல், அருளாளர்கள் மற்றும் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளையும் கேட்டு செயற்பட்டால்தான் வெற்றி பெற முடியும்.

**மேஷ - செவ்வாய் சஞ்சாரம்**

ஆனி 12 ஆம் திகதி, மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக்காலத்தில் சுக ஸ்[illegible] எனவே வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. பத்திரப்பதிவில் இருந்த தடை அகலும். சொத்து விற்பனை லாபம் தரும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களை விலக்குவீர்கள். உத்தியோகத்தில் மேலிடத்தின் சலுகைகள் கிடைக்கும்.

**கடக - புதன் சஞ்சாரம்**




ஆனி 28 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன்.

அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் ஆதாயம் தரும் தகவலைக் கொடுப்பர். எதிர்காலத்திற்காக சேமிக்க முன்வருவீர்கள்.

**மிதுன - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆனி 29 ஆம் திகதி, மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். பஞ்சமாதிபதி 6 இல் வரும் இந்த நேரம் பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

நகைகளை வாங்குவதில் ஆர்வம் செலுத்துவீர்கள். உறவினர்களும் நண்பர்களும் ஆதரவாக இருப்பர். மனக்குழப்பம் அகலும். வியாபாரத்தில் பற்று, வரவு கணிசமாக உயரும். "கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறவில்லையே" என்ற கவலை அகலும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஜென்மச் சனி வக்கிரம் பெற்றிருப்பதாலும், 10 இல் கேது இருப்பதாலும் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். உறவினர் பகை உருவாகும். கணவன் -மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படலாம். பணி நிரந்தரமாவதில் தாமதம் ஏற்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## பணத்தின் மதிப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

அருணாசலம் தன் பணத்தை எல்லாம் முத்தையாவிடம் கொடுத்து விட்டதால் வீராசாமி கை மாற்றாகப் பணம் கேட்டபோது கொடுக்க முடியவில்லை. அப்போது அருணாசலம் வீராசாமியிடம் "நீ வீணாகப் பணத்தை செலவு செய்யாதே. உன் பணத்தை முத்தையாவிடம் கொடுத்து வை. பத்து சதவீத வட்டி கிடைக்கும்" என்றான். அவனுக்கு அது பிடிக்கவில்லை. அவனது மனைவியும் "பணத்தை என்ன செய்ய வேண்டும் என்பது அவரவர் இஷ்டம். உங்கள் முறை வேறு இவர் முறை வேறு" என்று கூறினாள்.



வீராசாமிக்கு அந்த முறை வயலில் நல்ல விளைச்சல் கண்டது. அதனால் பணம் நிறையக் கிடைக்க, வீட்டுச் செலவெல்லாம் போகக் கையில் மூவாயிரம் ரூபாய் மிஞ்சியது. அதைக் கொண்டு ஒரு வைர மாலை வாங்கிக் கொள்ள வீராசாமியின் மனைவி விரும்பினாள். அவளுக்குப் பிடித்த வைரமாலை ஐயாயிரம் ரூபாய் விலையில் இருந்தது.


அப்போது அவள் தன் கணவனிடம் "நேற்று தான் உங்கள் நண்பர் அருணாசலத்திற்குத் தேங்காய் விற்றதில் ஐயாயிரம் ரூபாய் வந்தது. நீங்கள் போய் கை மாற்றாக இரண்டாயிரம் கேளுங்கள்" என்றாள்.

வீராசாமி அருணாசலத்தைக் கண்டு விடயத்தைக் கூறவே அவனோ "இப்போது வைரமாலை எதற்கு? உன் மூவாயிரத்தை முத்தையாவிடம் கொடு. பத்து சதவீத வட்டியாவது கிடைக்கும்" என்றான். வீராசாமியோ "வைர மாலை இல்லை என்றால் என் மனைவி உயிரை விட்டு விடுவாள்" எனவே அருணாசலமும் "நான் என் ஐயாயிரத்தை முத்தையாவிடம் கொடுத்து விட்டு உனக்கு வேண்டிய இரண்டாயிரம் ரூபாயைப் பன்னிரெண்டு சத வட்டிக்குக் கடனாக வாங்கிக் கொடுக்கிறேன். சரியா?" என்று கேட்டான்.

வீராசாமியோ "வட்டிக்குக் பணமா? நீ கைமாற்றாகக் கொடுப்பாய் என்று கேட்டேன்" என்றான். அருணாசலமும் "உனக்குப் பணம் வேண்டுமென்றால் சொல். இதுதான் ஒரே வழி நான் முத்தையாவிடமிருந்து கடன் வாங்கித் தருகிறேன் என்றான். வீராசாமியும் அதற்கு இணங்கினான். (தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




"சீதையை விட்டு விடலாம்; அப்பொழுதும் இழந்த புகழ் திரும்பப் போவது இல்லை; வெற்றி, தோல்வி மாறி வரும். தப்பித் தவறி இராமன் வெற்றி பெற்றால் சீதை உன் கையைவிட்டுப் போய்விடுவாள்; சீதையையும் விடாதே! போரையும் நிறுத்தாதே".

"மேலும் சீதையை அனுப்பிவிட்டால் அவளை விட்டு விட்டு, உன்னால் உயிர்வாழ முடியாது; அதனால், சமாதானம் உனக்கு எந்த நன்மையும் தரப் போவது இல்லை; போரில் உயிர் விட்டாலும் உயர் புகழ் வந்து சேரும்; உன் வலிமை உனக்கே தெரியாமல் இருக்கிறாய்" என்றான்.

அடுத்து மகோதரன் என்ற படைத் தலைவன் அவனுக்குச் செயற்படும் வகை குறித்துக் கூறினான்.

"ஊனைத் தின்று உடம்பைப் பருக்க வைத்திருக்கிறான் நம் கும்ப கர்ணன்; அவன் ஒருவன் போதுமே அத்தனை பேரையும் வானுக்கு அனுப்ப".

"மலை போன்ற அவன் உடலைக் கண்டு பகைவர் நிலைகுலைந்து ஓடி விடுவர்" என்றான்; அலைபோல் வந்த புதிய கருத்தை இராவணன் மலை போல் இறுகப் பற்றிக் கொண்டான். கிங்கரர் நால்வரைக் கூவிக் கும்பகருணனை அழைத்து வருமாறு ஏவினான்; அவர்களும் மல்லர்களும் இரும்புத் தடிகளை ஏந்தி.

"உறங்குகின்ற கும்ப கன்ன! உங்கள்
மாய வாழ்வு எலாம்
இறங்குகின்றது
இன்றுகாண் எழுந்திராய் எழுந்திராய்
கறங்கு போல வில் பிடித்த கால தூதர்
கையிலே
உறங்கு வாய் உறங்கு வாய் இனிக்
கிடந்து உறங்குவாய்"

என்று சொல்லி அவனை இடித்து எழுப்பினர்.

உறக்கம் நீங்கிய நிலையில் செருக்கு மொழி பேசும் இராவணன் முன் கும்பகருணன் வந்து நின்றான்; நின்றகுன்று, நடந்து வரும் மலையைத் தழுவுவது போல இருவரும் தழுவிக் கொண்டனர்; அன்பின் பிணைப்பு அவர்களை அணைத்தது. சொற்கள் வேறு இடை புகாமல் கட்டளை மட்டும் கால் கொண்டது.

"வானரச் சேனையும் மானிடர் இருவரும் நகரைச் சுற்றினர்" என்றான் இராவணன். "ஏன்?" என்று அவன் கேள்வி எழுப்பவில்லை. "கொற்றமும் உற்றனர்" என்று முடித்தான்.

"நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற வினாவை அவன் எழுப்பவில்லை; இராவணனும் காத்திருக்கவில்லை. "அவர் இன்னுயிரை அழித்து அவர்களைப் போனகம் செய்" என்றான்.

தூக்கத்தின் இனிமையை அப்பொழுது தான் பதின் மடங்காக உணர்ந்தான் பார்க்கத் தகாதவற்றைப் பார்க்கத் தேவை இல்லை; கேட்கத் தகாவதற்றைக் கேட்கத் தேவை இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.
– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எரிபொருள் நிலைய நிர்வாகம் நிதானமாகச் செயற்பட வேண்டும்

நாடு குட்டிச்சுவராகிவிட்டது. இதன் விளைவாகச் சட்டம் ஒழுங்கு சடுதியாகச் சீர்குலையத் தொடங்கியுள்ளது.

எந்தநேரத்திலும் அடிதடிகள் இடம்பெறும் வாய்ப்பு உண்டு.

அதிலும் குறிப்பாக எரிபொருள் நிலையங்களில் அடிபாடுகள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உளது.

இதற்கு எரிபொருள் நிலையங்களை மையப்படுத்திய கறுப்புச் சந்தைகளின் தோற்றமே காரணமாகும்.

அதாவது பெற்றோல் டீசலை வாங்கி அதனைக் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எரிபொருளின் உதவியுடன் வாகனங்களை வாடகைக்கு விட்டு உழைத்த நிலைமை வீழ்ச்சி கண்டுவிட, எரிபொருளை வாங்கி விற்பது இலாபம் தரக்கூடியது என்றபோது, அந்த வியாபாரம் களைகட்டவே செய்யும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இவ்வாறு எரிபொருள், கறுப்புச் சந்தைக்கு வந்துவிட்டபின் அதற்குள் நடந்தாகின்ற மோசடிகளும் ஏமாற்று நடவடிக்கைகளும் சொல்லிமாளா.

டீசல் என்று சுஹி தண்ணீரை விற்ற சம்பவம் தொடக்கம் பெற்றோலுக்குள் மண்ணெண்ணெய் கலந்து விற்பது ஈறாக, எல்லாம் நடந்தாகிறது.

இவ்வாறு மக்கள் மத்தியில் உருவாகும் எரிபொருள் கறுப்புச் சந்தை மெல்ல மெல்ல பலம் பெற, எரிபொருள் நிலையங்களில் மோசடிகளும் ஊழல்களும் தலைவிரித்தாடும்.

இங்குதான் எரிபொருள் தேவையுடன் நீண்டதூரம் வரிசையில் காத்து நிற்கின்ற மக்கள் குழப்பமடைகின்ற சந்தர்ப்பம் எழுகிறது.

எனவே எரிபொருள் நிலையங்களின் உரிமையாளர்களும் பணியாளர்களும் மிகவும் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

குறித்த எரிபொருள் நிலையங்களில் மக்களை ஒழுங்குபடுத்துவது, வரிசையில் காத்து நிற்கின்ற அடிப்படையில் எரிபொருளை வழங்குவது என்பன மிகவும் முக்கியமானவை.

ஏலவே நின்ற வரிசைக்கு மாறாக பிறிதொரு வரிசை ஏற்படாத வகையில் எரிபொருள் நிலைய நிர்வாகம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

சுருங்கக்கூறின் மிக நுணுக்கமான முறையில் நிலைமைகளை அறிந்து நேர்மைத் தன்மையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் எரிபொருள் நிலையங்கள் செயற்பட்டாலன்றி, அங்கு ஏற்படக்கூடிய பெரும் பிரச்சினைகளை எவராலும் கட்டுப்படுத்த முடியாமல் போகும்.

# பொறுமையாக இருந்தால் ரணில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பார்

## ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் தீர்வுகளை வழங்க முடிந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உரப் பிரச்சினை இதுவரை வெற்றிகரமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஆகையினால், அனைவரும் பதற்றமடையாமல் பொறுமையாக இருந்தால், எஞ்சியுள்ள பிரச்சினைகளுக்கும் பிரதமரால் தீர்வு காண முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# இலங்கை நெருக்கடியிலிருந்து மீள அவுஸ்திரேலியா உதவும்

## ஜனாதிபதி கோட்டாவிடம் உறுதி

(கொழும்பு)

இலங்கை அரசின் வருமானத்தை அதிகரிக்கவும் இயற்கை மின்சாரத்தை தயாரிக்கும் வேலைத்திட்டத்தை வெற்றியாக்கிக்கொள்ளவும் அவுஸ்திரேலியா உதவும் என அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் கிளேர் ஓ நீல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் நேற்று முற்பகல் கோட்டையில் உள்ள அரச தலைவர் மாளிகையில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

சுங்க நிர்வாகத்தில் அனுபவத்தை வழங்குவதன் மூலம் அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கவும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திட்டத்தை வெற்றியடையச் செய்யவும் அவுஸ்திரேலியா ஒத்துழைப்பு வழங்குமென்றும் கடற்றொழில் ஒழுங்குபடுத்தல், தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்தவும், சர்வதேச மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான மையமாக இலங்கையை மாற்றவும் தமது அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் ஆட்கடத்தலுக்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்பது அவுஸ்திரேலியாவின் முன்னைய கன்சர்வேடிவ் அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது. தற்போதைய புதிய தொழிற்கட்சி அரசாங்கத்தின் கொள்கையும் அதுவே யாகும் எனவும் கிளேர் ஓ நீல் தெரிவித்தார். (ம-7)

## இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறார்களுக்காக

# யுனிசெப் 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி

(கொழும்பு)

யுனிசெப் அமைப்பு 1.7 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை சிறார்களுக்காக மனிதாபிமான உதவிகளை கோரியுள்ளது.

இந்த மனிதாபிமான உதவிக்காக மேலும் 25 மில்லியன் அமெரிக்க டொலர் கோரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த சிறார்களில் பெரும்பாலானோர் ஊட்டச்சத்து குறைப்பாட்டு காரணியால் மரணிக்கக் கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், மோசமான பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை முகங்கொடுத்துள்ளதாக அந்த அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மதிப்பீட்டுக்கமைய, 5.7 மில்லியன் சிறார்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சிறார்களில் இருவரில் ஒருவருக்கு போசாக்கு, சுகாதார சேவை, சுத்தமான குடிநீர், கல்வி, மனநல சுகாதாரம் உள்ளிட்ட அவசர உதவிகள் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை 22 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

கிளிநொச்சி பிரதேசத்தில் பாலாவி, பொன்னாவெளி கருணாட்டுக்கேணி சந்தி, கொக்குளாய் மருத்துவமனை, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு (15 வதுமைக்கல்லடி), பரராஜசிங்கம் தோட்டம், புளியமனைச்சந்தி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் கூடு வெந்தபுலவு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## மகிழ்ச்சியாக இருப்பதற்கு மிக எளிய வழி

❖ உங்களுடன் ஒத்த எண்ணம் உடையவர்களை மட்டுமே அந்த அறைக்குள் அனுமதியுங்கள். அப்போது படிப்படியாக அந்த அறையில் புனிதச் சூழ்நிலை நிலவத் தொடங்கும்.

❖ துன்பத்தாலோ, துயரத்தாலோ, சந்தேகத்தாலோ மனம் கலங்கும் போது நீங்கள் அந்த அறைக்குள் சென்றால் போதும். மன அமைதியை உணர்வீர்கள். இத்தகைய புனிதமான சூழ்நிலையை உருவாக்கவே கோயில்கள். அவற்றுள் சில இடங்களில் இன்றும் புனிதம் நிறைந்திருக்கக் காண்கிறோம். ஆனால் பெரும்பாலான இடங்களில் இந்தக் கருத்தே மறைந்து விட்டது.

❖ புனிதமான உணர்வலைகளை நிலவச் செய்வதன் மூலம் ஓர் இடம் புனிதம் பெறுகிறது. புனிதமானதாகவே இருக்கிறது என்பதுதான் கருத்து. ஒரு தனி அறையை ஒதுக்கி வைக்க இயலாதவர்கள் விரும்பிய இடத்தில் பயிற்சி செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 12

**ஜோசப் ஸ்டாலின்தான் நீண்டகாலம் சோவியத் ஒன்றியத்தை ஆட்சி புரிந்தவர். அவருக்கு அடுத்தபடியாக நீண்ட காலத்திற்கு ரஷ்யாவின் ஜனாதிபதியாக இருப்பவர், இப்போதைய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின். ஸ்டாலினுடைய கடுமையான அணுகுமுறையைப்போலவே, தற்போது புடினின் அணுகுமுறையும் இருப்பதாகக் கூறப்படுகிறது.**

ஸ்டாலின் என்ற பெயருக்கு "இரும்பு மனிதன்" என்று பொருள். அவர் நாஜி அபாயத்தை தோற்கடிக்க உதவிய போர் இயந்திரத்துக்குத் தலைமை வகித்தார். கால் நூற்றாண்டு காலம் சோவியத் சோஷியலிஸ்ட் ஒன்றியத்தின் தலைவராக இருந்தார்.

**ஸ்டாலின் என்ற பெயருக்கு "இரும்பு மனிதன்" என்று பொருள். அவர் நாஜி அபாயத்தை தோற்கடிக்க உதவிய போர் இயந்திரத்துக்குத் தலைமை வகித்தார்.**

ஜோசப்பின் தாய் அவரை ஒரு பாதிரியார் ஆக்க விரும்பினார். 1895 இல் ஜோர்ஜிய தலைநகரான டிப்லிஸில் அதற்காக அவரைப் படிக்க அனுப்பினார். இருப்பினும் ஜோசப் கிளர்ச்சி செய்து, வேதத்தைப் படிப்பதற்குப் பதிலாக கார்ல் மார்க்ஸின் எழுத்துகளைப் படித்து உள்ளூர் சோசலிசக் குழுவில் சேர்ந்தார்.

ரஷ்ய மன்னராட்சிக்கு எதிரான புரட்சிகர இயக்கத்திற்கு அவர் தனது நேரத்தை அதிகமாகச் செலவிட்டார். அவருடைய தாயின் விருப்பத்திற்கு மாறாக, ஜோசப் ஒரு நாத்திகராக மாறி, பாதிரியார்களுடன் அடிக்கடி வாதிடுவார். 1899 இல் அவர் தனது தேர்வுகளுக்கு வரத் தவறியதால், பள்ளியில் இருந்து வெளியேற்றப் பட்டார்.

வானிலை ஆய்வு மையத்தில் எழுத்தாளராகப் பணிபுரியும் போது, ஜோசப் தனது புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொண்டு, வேலை நிறுத்தங்கள் மற்றும் போராட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தினார்.

அவருடைய நடவடிக்கைகள் ஜாரின் இரகசிய காவல்படைக்குத் தெரியவரவே, அவர் தலைமறைவாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர் ரஷ்ய கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியில் சேர்ந்து 1905 ரஷ்ய புரட்சியில் முதல் முறையாக கொரில்லாப் போரை (போர்முறை) நடத்தினார். போல்ஷிவிக் தலைவரான லெனின் உடனான அவருடைய முதல் சந்திப்பு பின்லாந்தில் நடந்த கட்சி மாநாட்டில் நிகழ்ந்தது. தலைமறைவில் இயங்கும் இந்த செயற்பாட்டாளரால் லெனின் ஈர்க்கப்பட்டார். 1907 ஆம் ஆண்டில், ஜோசப் 250,000 ரூபிள்களை (அமெரிக்க டொலர்களில் சுமார் $3.4 மில்லியன்) டிப்லிஸில் நடந்த ஒரு வங்கியைக் கொள்ளையடித்து, இயக்கத்தின் செயற்பாடுகளுக்காகக் கொடுத்து உதவினார்.

**1907 ஆம் ஆண்டில், ஜோசப் 250,000 ரூபிள்களை (அமெரிக்க டொலர்களில் சுமார் $3.4 மில்லியன்) டிப்லிஸில் நடந்த ஒரு வங்கியைக் கொள்ளையடித்து, இயக்கத்தின் செயற்பாடுகளுக்காகக் கொடுத்து உதவினார்.**

ஜோசப் தனது முதல் மனைவி கிடெவான் ஸ்வானிட்ஸ் 1906 இல் திருமணம் செய்து கொண்டார். அவர் சிறிய பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அதற்கு அடுத்த ஆண்டில் கிடெவான், மகன் யாகோவ் ஸ்ᵉகாஸ்விலியை பெற்றெடுத்தார். டிப்லிஸ் வங்கிக் கொள்ளைக்குப் பிறகு ஜோசப் மற்றும் அவரது குடும்பத்தினர் ஜாரிஸ்ட் படையிலிருந்து அசர்பைஜானில் உள்ள பாகுவுக்கு தப்பிச் சென்றனர். 1907 ஆம் ஆண்டில் கிடெவான், டைஃபஸில் இறந்தபோது, ஜோசப் சோகத்தில் மூழ்கினார். அவர் தனது மகனை, மனைவியின் பெற்றோர் கவனித்துக் கொள்ள விட்டுவிட்டு, தனது புரட்சிகர வேலையில் மூழ்கியதன் மூலம் தன்னை உணர்வுகளிடம் இருந்து துண்டித்துக் கொண்டார். அவர் ரஷ்ய மொழியில் "இரும்பு" என்று பொருள்படும் "ஸ்டாலின்" என்ற பெயரை ஏற்றுக் கொண்டார். பல சந்தர்ப்பங்களில் அவர் கைது செய்யப்பட்டார். 1910 ஆம் ஆண்டில் கடும்பனிப் பரப்பான சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார்.

### ரஷ்யப் புரட்சியில் ஜோசப் ஸ்டாலினின் பங்கு

"அமைதி, நிலம் மற்றும் ரொட்டி" என்ற முழக்கங்களின் கீழ் ரஷ்யப் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார் லெனின். போல்ஷிவிக் பத்திரிகையான பிராவ்தாவை நடத்தியதன் மூலம் ஸ்டாலின் அந்தப் புரட்சியில் முக்கிய பங்கு வகித்தார்.

சார் மன்னரின் இராணுவத்திலிருந்து பின்லாந்திற்கு தப்பிச் செல்ல லெனினுக்கு உதவியபோது, அவர் ஒரு கதாநாயகனாகப் போற்றப்பட்டதோடு, போல்ஷிவிக் கட்சியின் உள் வட்டத்திற்குள் நுழைந்தார்.

சார் ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் நாடு உள்நாட்டுப் போரில் இறங்கியது. ஸ்டாலின், கட்சியில் உள்ள மற்ற கடும்போக்குவாதிகளைப் போலவே, தப்பியோடியவர்கள் மற்றும் துரோகிகளை பகிரங்கமாகத் தூக்கிலிட உத்தரவிட்டார். லெனின் ஆட்சிக்கு வந்ததும் ஸ்டாலினை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக நியமித்தார்.

### சர்வாதிகாரியாக உயர்ந்த ஜோசப் ஸ்டாலின்

1924 ஆம் ஆண்டில் லெனின் இறந்த பிறகு, ஸ்டாலின் தன்னை அவருடைய அரசியல் வாரிசாக உயர்த்திக் கொள்ளத் தொடங்கினார். கட்சியில் பலர் செம்படைத் தலைவர் லியோன் டிராட்ஸ்கி லெனினின் இயற்கையான வாரிசாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

ஆனால் ஸ்டாலினின் கருத்துகள் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரும்பான்மையினருக்கு மிகவும் இலட்சியம் மிக்கதாக இருந்தது. ஸ்டாலின் உலகப் புரட்சியை விட சோவியத் யூனியனை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தினார். ஸ்டாலினின் கருத்துகள் கட்சியில் பிரபலமாயின. 1920 களின் பிற்பகுதியில் அவர் சோவியத் ஒன்றியத்தின் சர்வாதிகாரியாக் மாறினார்.

### விரைவான தொழில்மயமாக்கல்

1920 களின் பிற்பகுதியில் சோவியத் யூனியனை நவீன தொழில்மயமான நாடாக மாற்ற ஸ்டாலின் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தொடங்கினார்.


சோவியத் யூனியன் நவீனமயம் ஆக்கப்படாவிட்டால், கம்யூனிசம் தோல்வியடையும் முதலாளித்துவ அண்டை நாடுகளால் அழிக்கப்படும் என்று அவர் அஞ்சினார். அவர் நிலக்கரி, எண்ணெய் மற்றும் எஃகு உற்பத்தியை பெரிய அளவில் உயர்த்தினார். நாடு மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியைக் கண்டது.

அவருடைய திட்டங்கள் இரக்கமின்றி செயற்படுத்தப்பட்டன. தொழிற்சாலைகளுக்கு கடுமையான இலக்குகள் வழங்கப்பட்டன. பல தொழிலாளர்கள் அதைச் சாத்தியமற்றதாக நினைத்தனர்.

இலக்கில் தோல்வியுற்றவர்கள் நாசக்காரர்கள் என்று பலிகடா ஆக்கப்பட்டார்கள், அரசின் எதிரிகளாக சிறையில் அடைக்கப்பட்டார்கள் அல்லது தூக்கிலிடப்பட்டார்கள்.

### கூட்டுப் பண்ணைகளும் பஞ்சங்களும்

ஸ்டாலின் விவசாயத்தை நவீனமயமாக்கி, கூட்டுப் பண்ணைகளாக மாற்றினார். சாதாரண விவசாயிகள் இதை எதிர்த்தார்கள். இதையடுத்து ஏற்பட்ட பஞ்சத்தில் சுமார் 50 இலட்சம் பேர் இறந்தனர். இலட்சக்கணக்கான சிறு உரிமையாளர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது சிறையில் அடைக்கப்பட்டார்கள். இருந்தாலும் 1930 களின் பிற்பகுதியில் விவசாயம் முழுவதுமாக ஒருங்கிணைக்கப்பட்டு உற்பத்தித்திறன் அதிகரித்தது.



லெனினுடன் ஸ்டாலின்

**1924 ஆம் ஆண்டில் லெனின் இறந்த பிறகு, ஸ்டாலின் தன்னை அவருடைய அரசியல் வாரிசாக உயர்த்திக் கொள்ளத் தொடங்கினார்.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல புகையிரத...

இணை அழைப்பாளர் எஸ்.பி.விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

இதனால் தினமும் 50 முதல் 60 புகையிரதங்கள் இரத்துச் செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதி செய...

கப்பட்டது.

இதன்போது அங்கு பாரியளவிலான படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் 21 பேர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி செயலகத்தின் லோட்டஸ் மார்க்கத்தின் இரு பிரதான நுழைவாயில்களையும் மறித்து, கூடாரங்கள் அமைத்து, காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னெடுத்த போராட்டம் காரணமாக அதனை அண்டிய பகுதிகளில் நேற்றுக் காலை போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இதனை அடுத்து பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது நடவடிக்கையைத் தொடர்ந்தும் பெருமளவானோர் அங்கு திரண்டு கைதானவர்களை விடுதலை செய்ய வலியுறுத்திப் போராடினர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட 21 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் தேரர் ஒருவர், பெண்கள் 4 பேர் மற்றும் 16 ஆண்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## மருத்துவமனை...

பில் வைத்தியர் ஒருவர் டுவிட்டர் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குழந்தையை பிரசவித்த பின்னர் தாய்க்கு குருதிப்பெருக்கு ஏற்பட்டிருந்தது, மருத்துவர் எரிபொருளை பெறுவதற்கான வரிசையில் நின்றிருந்தார், முச்சக்கரவண்டிகூட கிடைக்கவில்லை.

எரிபொருள் வரிசையில் நின்ற மருத்துவரை கூட்டி வருவதற்காக வாகனங்களை அனுப்புவதற்கு பொலிஸார் முயன்றனர்

இது இலங்கையின் கிராமமொன்றில் இடம்பெறவில்லை - நுகேகொடயில் இடம்பெற்றது. யார் பொறுப்பு என மருத்துவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ம-7)

## சிறுபோகத்துக்...

கையளிப்பதே நோக்கமாகும்.

இதன் பின்னர் ஒவ்வொரு போகத்திற்கும் தேவையான உரத்தை உரிய காலப் பகுதியில் வழங்குவது தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம-7)

## 21ஆவது திருத்...

இந்தநிலையில் குறித்த வரைபு விரைவில் பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் அந்த நகல் அரசியலமைப்புடன் ஒத்துப்போகிறதா? என்பதற்கான வியாக்கியானத்துக்காக, சபாநாயகரால் உயர்நீதிமன்றுக்கு அனுப்பப்படவுள்ளது.

இதன்போது இந்த வரைபை சவாலுக்கு உட்படுத்த உயர்நீதிமன்றம் இரண்டு வார கால அவகாசத்தை வழங்கும்.

உயர்நீதிமன்றின் வியாக்கியானத்துடன் திருத்தங்கள், பாராளுமன்றில் இரண்டாம் வாசிப்புக்காக எடுக்கப்படுவதற்கு ஒரு மாதம் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் பாராளுமன்றில் இந்த 21ஆவது திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா? என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பொதுஜன பெரமுனவும் நிறைவேற்று ஜனாதிபதி முறை முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்றும் அரசியல் அமைப்புத் திருத்தங்கள், துண்டு துண்டாக நிறைவேற்றப்படக்கூடாது என்ற கருத்தை கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

எனவே அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ள பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைத்தால் மாத்திரமே, 21ஐ நடைமுறைப்படுத்தமுடியும் என்பது யதார்த்தமாகும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## கவனிக்காமல்...

ழந்துள்ளார்.

இச்சம்பவம் அராலி மேற் கில் இடம்பெற்றது.

சம்பவம் குறித்து தெரியவருகையில்,

குறித்த இளைஞனுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் காலில் முள் தைத்துள்ளது.

இருப்பினும் காலில் தைத்த முள்ளினை காணவில்லை, முள் தைத்த இடத்தில் வலி மாத்திரம் காணப்பட்டது.

இந்நிலையில் அவரால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து அவர் கடந்த 9ஆம் திகதியன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தருமராசா மதிகரன் (வயது - 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7,104)

## பிரதேச செயலக...

குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட மீளாய்வுக் கூட்டத்தின்போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தத்தம் பிரதேச செயலகங்களின் பொறுப்பில் செயற்படும்.

நாளாந்த கையிருப்பு தகவல்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தினமும் இரண்டு தடவைகள் நேரடியாக சேகரிக்கப்படும். இதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிரதேச செயலாளர் நியமிப்பார்.

பிரதேச செயலகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான வினியோகத்தை இடைநிறுத்த CEYPETCO தீர்மானம்.

வாகனங்களுக்கான பங்கீட்டு அட்டை முறை அறிமுகமாகிறது.

- ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது.

அதன்படி மக்கள் தமது வதிவிட பிரதேசத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை தெரிவு செய்து அங்கு மாத்திரமே எரிபொருளை பெறும் வகையில் பொறிமுறை உருவாக்கப்படும்.

சுகாதார சேவையினருக்கான எரிபொருள் விநியோகத்துக்கு தனியான ஏற்பாடுகள் செய்யப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கான எரிபொருள் நிலையத்தை தெரிவு செய்து பதிவு செய்யும் வகையில் விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் திணைக்கள தலைவர்களிடம் மாத்திரமே தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

ஒவ்வொரு பிரதேச செயலக எல்லைகளுக்குள் அமைந்துள்ள ப.நோ.கூ.ச MPCS நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் எரிபொருளை வழங்கும். (ம-7,18,33,104)

## எரிபொருளுக்...

பட்டு மூவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரு நாட்களாக பெற்றோலை பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் ஒரு தரப்பினர் காத்திருக்க, புதிதாக வந்தவர்கள் மற்றொரு வரிசையை ஆரம்பித்து, பெற்றோலை பெற்றுக் கொள்ள முயற்சித்தமையே மோதல் சம்பவத்துக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## ஜனாதிபதி...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதியின் கீழ் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்காது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர் வெளியேறும் போது நாடு மீண்டும் கட்டியெழுப்பப்படுவதற்கான வாய்ப்புகளுக்கான வாயில்கள் திறக்கப்படும் எனத் தெரிவித்தார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1270
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 1 9 8 6 5 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.20
சீட்டிழுப்பு இலக்கம் 3034
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 41 51 56 57
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1140
வெற்றி எழுத்து B
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 03 15 19 48

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.20
சீட்டிழுப்பு இலக்கம் 101
வெற்றி இலக்கம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 13 23 40 45
சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/20
சீட்டிழுப்பு இலக்கம் 4792
P 6 7 7 6 7 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.06.20
சீட்டிழுப்பு இலக்கம் - 822
P 32 60 64 82
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1767
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.06.20
தினம் திங்கட்கிழமை
X 02 15 30 67
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,269,080/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.20
சீட்டிழுப்பு இல : 3928
வர்ணம் : நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,083,000/-
வெற்றி இலக்கங்கள் 05 07 48 60
ஆங்கில எழுத்து C

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,821,577.40
திகதி 2022-06-20
வெற்றி வாரம் 3479
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 02 07 25 32
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,672,940/-

12 ஸ்வர்ண
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 16 04 45 51 74
சீட்டிழுப்பு வாரம் 943
2022.06.20 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 243,533,263/-
011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1593
சீட்டிழுப்பு திகதி : 2022.06.20
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,177,200/-
வெற்றி இலக்கங்கள் 26 29 49 76
ஆங்கில எழுத்து I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடன் இலங்கை நேர்மையாக செயற்படுகின்றது

## ஐ.நா ஆணையாளரிடம் ஜி.எல். பீரிஸ்

(கொழும்பு)

**மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அமைப்புகளுடன் இலங்கை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உறுதியளித்துள்ளார்.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50 ஆவது அமர்வின் பக்க அம்சமாக, வெளிவிவகார அலுவல்கள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ், மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் ஆகியோரையும் சீனா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, கொரியக் குடியரசு, ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தநிலையில் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் உடனான சந்திப்பின் போது, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு - நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி இலக்கு பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட உள்ளூர் பொறிமுறைகளினால் நாட்டில் எட்டப்பட்டுள்ள பெறுபேறுகளையும் அவர் விளக்கியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்வதற்கா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு முன்னர் விடுக்கப்பட்ட அழைப்பு இன்னும் அவ்வாறே இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியான சென் சூ உடனான இருதரப்பு சந்திப்பின் போது, இலங்கைக்கு பல ஆண்டுகளாக சீனா அளித்து வரும் ஆதரவிற்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள், குறிப்பாக வெளிநாட்டு இருப்புக்கள் மற்றும் உணவு - எரிசக்தி பாதுகாப்பில் அவற்றின் தாக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் அவர் சீன பிரதிநிதியுடன் கலந்துரையாடியுள்ளார். (ம-7)


உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

✓ வயது-22 தொடக்கம் 35

✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)



(C-4521)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி





விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

(C-4521)

V2 TRAVELS

எமது கிளைகள்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். | 0777-068-777


### சர்வகட்சி அரசு அமைக்க உடனடியாக பிரதமர் ரணில் பதவி விலக வேண்டும்

#### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)



தற்போதைய அரசாங்கம் இருக்கும் வரை சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதைய பிரதமர் பதவியில் இருந்து விலகி அனைத்து கட்சி அரசாங்கத்திற்கு புதிய பிரதமரை நியமிக்க வேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (ம-7)

### உக்ரைனிலும் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு பதாகை

(கொழும்பு)



"கோ கோம் கோட்டா" என குறிப்பிடப்பட்ட அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான பதாகையை ஏந்தியவாறு உக்ரைன் இராணுவ வீரர்களின் புகைப்படம் சமூகவலைத் தளங்களில் வைரலாகியுள்ளது.

உக்ரைனில் இடம்பெறும் கடுமையானபோருக்கு மத்தியில் இலங்கை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

உக்ரைன் இராணுவத்துக்காகப் போரிடுவதாகக் கூறப்படும் இலங்கையின் முன்னாள் இராணுவ வீரர் ஒருவரே இவ்வாறு தனது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார். (ம-7)


உ

ஸ்ரீ முனீஸ்வரன் துணை

யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய

அலங்கார உற்சவம் 30 ஆம் திகதி ஆரம்பம்



யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 30.06.2022 வியாழக்கிழமை ஆரம்பமாகும் என்பதனை முனீஸ்வரன் அடியவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(C-4526)

கோட்டை முனீஸ்வரன் ஆலயம், யாழ்ப்பாணம்.

021 320 5775, 076 654 8874

ம.ஞானசேகரம் ஐயா பூசகரும் பரியாலகரும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.